1978 ஏப்ரல் 7]

திரு. கா. அப்புனு கவுண்டர்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலேயும் ஒவ்வொரு ஸ்டேடியம் கட்டுவது அரசின் கொள்கையா? அப்படி என்றால் இப்போது இல்லாமல் இருக்கும் இடங்களில் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அப்படியொரு திட்டம் இருக்கிறது. அதற்கு அந்தந்த மாவட்டங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தேசீய முதியோர் கல்வித் திட்டம்

*835 வினா திரு. கு. ரமணி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய முதியோர் கல்வித் திட்டம் ஒன்றை மத்திய அரசு துரிதமாக அமுல் நடத்த உள்ளது என்பது தமிழக அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் என்ன?

(இ) தமிழகத்தில் அதை அமுலாக்க ஏற்பாடு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) ஆம்.

(ஆ) மைய அரசு தனது முதியோர்க் கல்வித் திட்டத்தின் கீழ் இந்தியாவிலுள்ள பதினைந்து வயதிலிருந்து முப்பத்தைந்து வயதுவரை எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் அனைவருக்கும் படிப்பறிவு புகட்டவேண்டும் என்றும், இத்திட்டத்தை 2-10-78 முதல் நடைமுறைக்குக் கொண்டு வந்து ஐந்து ஆண்டுகளில் அறியாமையைப் போக்க வேண்டுமெனவும் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான கல்வி மையங்களை மனமுவந்து செயல்படும் நிறுவனங்கள், (Voluntary agencies) அரிமா சங்கம், ரோட்டரி கிளப், நேரு யுவக் கேந்திரங்கள் போன்றவை நடத்தலாமெனவும் மீதியுள்ள இடங்களில் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அரசே இம்மையங்களை நடத்தலாமெனவும் மைய அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவு முழுவதையும் மைய அரசு ஏற்க உள்ளது. அதில் நிருவாகச் செலவில் 75 விழுக்காட்டினையும் (Administration cost) செயல்படுமிடத்திலுள்ள செலவு (field cost) முழுவதையும் மைய அரசு ஏற்பதாகத் திட்டமிட்டுள்ளது.

(இ) ஆம்.

[1978 ஏப்ரல் 7

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, இதற்காக மைய அரசு மாநில அரசுக்கு ஆண்டுதோறும் வழங்குகின்ற தொகை என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, திட்டத்தை அமுல் நடத்துகின்றபொழுதுதான் அந்த முழு விவரமும் தெரியும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இதுவொரு முக்கியமான திட்டமாகும். இப்பொழுதுகூட நம்முடைய கிராமப் பகுதிகளிலே பெரும்பாலான வயதானவர்கள் தாங்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் வாங்கும்பொழுது ரேகை வைத்துதான் வாங்குகிறார்கள். அப்படி ரேகை வைப்பதால் பலவிதமான சிக்கல்கள் இருப்பது கூட்டுறவு அமைச்சர் அவர்களுக்குக்கூடத் தெரியும். மத்திய அரசு அதிகமாக நிதியளிக்கத் தயாராக இருக்கும்பொழுது முதியோர் அனைவரும் படிக்கத் தக்க அளவிலே தினமும் ஒருமணி நேரமாவது சொல்லிக்கொடுக்கும் வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் நடத்துவதற்கு இப்பொழுது உள்ள ஆசிரியர்களுக்கு தனியாக ஊதியம் கொடுத்து இந்தத் திட்டத்தைத் துரிதமாக, ஐந்தாண்டுகளில் வயதானவர்கள் கையெழுத்துப் போடுகின்ற அளவிலாவது செய்வதற்கு முயற்சியெடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்த அரசு அதிலே அக்கறை காட்டுகிறது என்கிற அடிப்படையில் இந்தத் திட்டத்தில் நாங்கள் அக்கறை எடுத்துச் செயல்படுத்தி வருகிறோம். அதற்காக ஒரு மாநில வாரியமும் அமைக்கப்பட இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவரவர்களே, தேசிய முதியோர் கல்வித் திட்டம் ஆரம்பிப்பதற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அரசாங்கத்திற்கா, படிப்பவர்களுக்கா, மைய அரசுக்கா, யாருக்கு என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

Lakshmi Machine Works, Coimbatore.

* 336 Q—Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) Whether it is a fact whether while seven unions gave strike notice in Lakshmi Machine Works, Coimbatore, settlement was signed under 12(3) of Industrial Disputes Act, with only one union and lock-out lifted;